தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1975 நவம்பர் 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 3 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் படுகிறது. வினாக்கள் 260, 261, 262, 263, 264 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கேற்ப முதலில் எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

REPORTING SECTION

குறைந்த அளவு ஊதியங்கள்.

*** 260. வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழிலாளர் நலன்—போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத் தொழிலாளர்களின் கூலியை மாற்றி அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) 1948-ம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களை மாற்றியமைப்பதுகுறித்து அரசுக்கு ஆலோசனை கூறக் குழு ஒன்றினை 1—9—1975 அன்று அரசு அமைத்துள்ளது.